# நியுமேன் மிஷனரி ஊழியங்கள்

**தரிசனம் - 2024**

**12 மாநில ஊழிய பணிகள்**

- நமது ஊழியத்திற்கான தலைமை அலுவலகம் கட்டுதல்.
- 1 கிராம சுவிசேஷ குழு அமைத்தல்.
- 10 சபைகளை நிறுவுதல்.
- 20 மிஷனரிகளை அனுப்புதல்.
- 30 மாணவர்களுக்கு மிஷனரி பயிற்சி கொடுத்தல்.
- 40 ஜெப குழுக்கள் உருவாக்குதல்.
- 5000 சிறுபிள்ளைகளை H.B.S. மூலம் சந்தித்தல்.
- 12 மாநில ஒருங்கிணைப்பு ஜெபமையம் ஆரம்பித்தல்.
- புதிய ஆத்துமாக்களை கிறிஸ்துவின் மந்தையில் சேர்த்தல்.

இத்தரிசனத்தை தேவன் நிறைவேற்ற இணைந்து ஜெபித்து தாங்க உங்களை அன்போடு கேட்டு கொள்கிறோம்.


மாநில அலுவலகங்கள்

**நியுமேன் மிஷனரி ஊழியங்கள்**

**திருநெல்வேலி அலுவலகம்:**

சேந்திமங்கலம்
பெருமாள் கோவில் தெரு,
திருநெல்வேலி. **Cell: 88836 47007**

**சென்னை அலுவலகம்**

1/7, T.V. அம்மன் கோவில் தெரு,
அரும்பாக்கம், சென்னை - 106
**Cell: 8939157071**



**POSTAL REGD. NO.: KKI/75/2023-2025**
**POSTED AT NAGERCOIL HEAD POST OFFICE**
**ON 5th OF EVERY MONTH.**
**Date of Publication : Last Day of Every Month**

**To**

**REGISTERED NEWS PAPER UNDER NO.TNBIL/2006/19264**

Published by P. Arul Jeba Dhas and owned by P. Arul Jeba Dhas and published from Allenkottai, Ganapathipuram - 629 502, K.K. Dist. and Printed by G. David Raj at Innovation Printers & Publishers 60-23/7, New Assisi Complex, Court Road, Nagercoil - 629 001. Editor P. Arul Jeba Dhas.



If Undelivered please return to:
**'NAM MEETPU'**
Allenkottai, Ganapathi Puram (P.O) Kanyakumari,
South India - 629 502. ☎ **04652-233398**
**Cell: 9943475548**





Innovation Printers, Ngl.☎:9367511689


# நம் மீட்பு
# NAM MEETPU

**மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ளுங்கள்.**
**எபேசியர் 4:24**


**Vol. 18 | Iss.8 | June 2024**


## ஊழியக்காரர்

டயாகொனொஸ் (Diakonos) என்னும் கிரேக்க சொல்லுக்கு ஊழியக்காரர் என்று பொருள்.

டயாகொனொஸ் எனும் சொல் புதிய ஏற்பாட்டில் 36 முறை காணப்படுகிறது. ஓர் மேசையிலிருந்து வரும் உத்தரவுக்காக காத்திருப்பவரை பற்றின இச்சொல் (மத்.22:13; மாற்கு 1:31) கரிசனையுள்ள உதவி செய்பவரைப் பற்றினது, மேலும் இச்சொல் சபையில் உதாரணத்துவமாக/தாராளமாக மனமுவந்து பணி செய்பவரையும் குறிக்கும் (அப்.6:1, ரோமர் 12:7, பேதுரு 4:11). இயேசு கிறிஸ்து அன்பினால் உதாரணத்துவத்தால், தாழ்மையால் முன் மாதிரியான ஊழியக்காரராக இருக்கிறார் (மாற்கு 10:43, மத்.23:11).

**Prof. Dr. சாமுவேல் ஜெப மணி**


**e.mail: director.newman@gmail.com web: www.newmanmissionary.org**

**இணையத்தில் "நம்மீட்பு"** நம் மீட்பு பத்திரிக்கையின் பதிவிறக்கம் செய்ய www.newmanmissionary.org பார்க்கவும்.

*Price : Monthly Rs. 15/-* *Annual Rs. 150/-*

## நம் மீட்பு

ஆசிரியர்: Bro. அருள் ஜெபதாஸ்
இணை ஆசிரியர்: Sis. சரளா ராணி

நமது ஊழியத்திற்கு வங்கி மூலம் நன்கொடைகள் அனுப்புவோர் கவனத்திற்கு

**NEW MAN MISSIONARY MINISTRIES**

A/c No : 61823070001930
IFS Code : CNRB0001110
Bank : Canara Bank
Branch : Nagercoil, College Road.

**NAM MEETPU**

A/c No : 61823070003764
IFS Code : CNRB0001110
Bank : Canara Bank
Branch : Nagercoil

**NEW EARTH SOCIAL TRUST**

A/c No : 61821010000260
IFS Code : CNRB0001110
Bank : Canara Bank
Branch : Nagercoil

**நியுமேன் மிஷனரி ஊழியங்கள்**
221/93, ஜோஷ்வா தெரு,
விஜயெதா மண்டபம் கிழக்கு,
நாகர்கோவில்.
Cell: 9943475548
Phone: 04652 - 233398



இராஜாங்கபுரம் பணித்தள
HBS நிகழ்வு



மந்தியூர் பணித்தள
HBS நிகழ்வு



கடப்பாகத்தி பணித்தள
HBS நிகழ்வு



பாவூர்சத்திரம் பணித்தள
HBS நிகழ்வு





## Newman School of Theology & Mission (NSTM)

Therekaalputhoor, Nagercoil.
Phone: 9444471403, 8903847769

நமது மிஷனரி இறையியல் பயிற்சி நிலையத்தில் ஜூன் மாதத்திலிருந்து 2024-2025-ம் கல்வியாண்டிற்கான மாணவர் சேர்க்கை நடைபெறும்.

விண்ணப்ப படிவத்தை www.newmanmissionary.org என்ற இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

[redacted]
மிஷனரியாக
அழைக்கப்பட்டவர்களுக்கு கல்வி இலவசமாக கற்றுக் கொடுக்கப்படும்.

**Courses:**

- Diploma in Theology (Dip.Th) - 2 years
- Bachelor of Theology (B.Th) - 3 years
- Bachelor of Divinity (B.D) - 4 years

Qualification: 12th Std, Any One Degree.



மிஷனரி பயிற்சி மையம்

E-mail :
newmantheologicalseminary@gmail.com

## New Earth Social Trust (NEST)

221/93, Joshua Street, Nagercoil-1
K.K.Dist, TamilNadu.

நமது நாட்டின் பின்தங்கிய கிராமங்களின் முன்னேற்றத்திற்காக NEW EARTH SOCIAL TRUST (NEST) - ன் நல்ல திட்டங்கள் தகுதியுடைய ஏழை மக்களுக்கு சென்று சேரவும், அதன் மூலம் அவர்கள் வாழ்க்கை தரம் உயரவும் தங்களின் உதாரத்துவமான உதவியினை அன்போடு எதிர்பார்க்கிறோம்.

### NEST – ன் பணிகள்

**ஆண்டுதோறும்**

- 5 Bore Well அமைத்துக் கொடுத்தல்.
- 10 ஏழை விதவைகளுக்கு வீடு அமைத்தல்.
- 15 ஆதரவற்ற பெண்களுக்கு தையல் இயந்திரம் வழங்குதல்.
- 20 ஏழை பிள்ளைகளுக்கு கல்வி உதவி தொகை வழங்குதல்.
- பொருளாதார மேம்பாட்டு பணிகளாக ஏழைகளுக்கு ஆடு வழங்குதல்.
- கிராமங்களில் மருத்துவ முகாம் நடத்துதல்.
- விழிப்புணர்வு முகாம்கள் நடத்துதல்
- ஒரு கிராமத்தை தத்தெடுத்தல்.

# உலக நடப்பு செய்திகள்

1. ரெயில்களில் பயணம் செய்ய முன்பதிவு இல்லாத பயணச்சீட்டுகள் ரெயில் நிலைய பதிவு அலுவலகங்களில் வழங்கப்பட்டு வந்தன. அங்கு பயணிகள் நீண்ட வரிசையில் காத்திருக்காமல் இருப்பதற்காக டிக்கெட் பெறுவதற்கு தானியங்கி எந்திரங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அதன் தொடர்ச்சியாக தற்போது செல்போனில் யூ.டி.எஸ். என்ற செயலி மூலம் டிக்கெட் பதிவு செய்யும் முறை வந்தது. இதில் காகிதம் பயன்படுத்தாமல் டிக்கெட் பதிவு செய்வதால் சுற்றுச்சூழல் பாதுகாப்பை உறுதி செய்வதாக பாராட்டும் பெற்றுள்ளது.
2. உலகில் தேனீக்கள் அழிந்து விட்டால், அடுத்த 4 ஆண்டுகளில் மனித இனம் அழிந்துவிடும். தேனிக்கள் குறித்து ஆல்பர்ட் ஐன்ஸ்டைன் கூறியதாகச் சொல்லப்படும் கூற்று ஐன்ஸ்டைன் இதைக் கூறியதற்கு எந்த ஆதாரமும் இல்லை என்றாலும் கூட, தேனீக்கள் இல்லையென்றால் உலகின் உணவு உற்பத்தி பெரிய அளிவில் பாதிக்கப்படும் என்பது மறுக்க முடியாத உண்மை.
3. பிரேசிலில் இதுவரை இல்லாத வகையில் டெங்கு பாதிப்பு அதிகரித்து காணப்படுகிறது. அந்த வகையில் இந்த ஆண்டில் இதுவரை டெங்குவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 51 இலட்சத்தை தாண்டியுள்ளது.
4. குற்றாலத்தில் உள்ள பழைய அருவி மற்றும் மெயின் அருவிகளில் நிர்வாகத்தை வனத்துறையிடம் ஒப்படைக்க மாவட்ட நிர்வாகம் முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.
5. உலக பாரா தடகள போட்டிகளில் இந்தியா அணி இதுவரை 12 பதக்கங்கள் (5 தங்கம், 4 வெள்ளி, 3 வெண்கலம்) வென்று பதக்கப்பட்டியலில் 3–வது இடம் வகிக்கிறது. உலக பாரா தடகள போட்டி ஒன்றில் இந்தியா கைப்பற்றிய அதிகபட்ச எண்ணிக்கை இதுவாகும்.

## ஊழியத்திற்கு ஆட்கள் தேவை

நியுமேன் மிஷனரி ஊழியத்தில் பணியாற்ற முன்னேற்ற பணியாளர்கள் மற்றும் தன்னார்வல பணியார்கள் தேவை. ஊழிய வாஞ்சையுள்ள ஆர்வமுள்ளவர்கள் எங்களை தொடர்பு கொள்ளவும்.
**Cell : 9943475548**





# இயக்குனரிடமிருந்து...

உலக இரட்சகராம் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே வாழ்த்துகிறோம்.

**"நீ நிலத்தில் விதைக்கும் உன் விதைக்கு அவர் மழையையும், நிலத்தின் பலனாகிய ஆகாரத்தையும் தருவார்". (ஏசாயா 30:23)**

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் சிவகங்கை மாவட்டத்திலுள்ள நமது இடைக்காட்டூர் பணித்தளத்தை பார்வையிடவும் தேவசெய்தி வழங்கவும் தேவன் அருள் புரிந்தார்.

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள படப்பாக்குறிச்சி மற்றும் சேந்திமங்கலம் பணித்தளங்களை பார்வையிடவும், தேவசெய்தி அளிக்கவும் கர்த்தர் கிருபை செய்தார்.

நமது தலைமை அலுவலக கட்டுமானப் பணிக்காக சென்னையிலுள்ள பங்காளர்களை சந்திக்கவும், வானகரம் ஜெப வீடு மற்றும் **ACA** சபை மற்றும் அரும்பாக்கம் கோயம்பேடு ஆகிய சபைகளில் சிறப்பு செய்தி அளிக்கவும் தேவன் கிருபை நல்கினார்.

குமுளி பகுதியில் ஒரு நாள் தியானமுகாம் நடத்திடவும் அதனை மையமாகக் கொண்டு 30,31 ஆகிய தேதிகளில் சுற்றுலா பவனியினை விசுவாசிகள் மற்றும் பங்காளர்களை கொண்டு சிறப்பிக்கவும் கர்த்தர் அருள் புரிந்தார்.

நமது செம்மண்குளம் பணித்தள மிஷனரி கார்த்திக் அவர்களின் திருமணவிழாவில் கலந்து சிறப்பித்து குடும்பத்தாரை வாழ்த்திட தேவன் கிருபை கூர்ந்தார்.

நமது மந்தியூர் பணித்தள மிஷனரி சிம்சோன் அவர்களின் குழந்தையின் முதலாம் பிறந்தநாள் விழாவில் கலந்து கொள்ள, குழந்தையை ஆசீர்வதிக்க தேவன் தயை புரிந்தார்.

கிறிஸ்துவின் பணியில்
சகோ. **P. அருள் ஜெப தாஸ்**
**Cell : 99434 75548**

[illegible]

# பெலப்படுத்தும் கிறிஸ்து

(பிலிப்பியர் 4:13)

— சகோ. I. பாலன்

உலக இரட்சகராம் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்கள் யாவரையும் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். கிறிஸ்தவ வரலாற்றில் நாம் கடவுளுடைய பிள்ளைகள் பலரைக் கண்டு வியந்திருப்போம். அவர்களில் ஒருவர் தான் பேர்பெச்சுவா என்ற 3–ம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு பெண். கி.பி 182–ல் செல்வாக்கான குடும்பத்தில் பிறந்து, நன்றாக கல்வியறிவு பெற்ற இளம்பெண் செப்டிமஸ் செவர்ஸ் என்ற ரோம பேரரசரால், கிறிஸ்துவின் மேலுள்ள தன் விசுவாசத்தை மறுமதலிப்பதற்காக பலவிதமான பாடுகளுக்கு உட்படுத்தப்பட்டார். சிறையிலடைக்கப்பட்டார். அடிக்கப்பட்டார். உணர்ச்சி மிரட்டல் செய்யப்பட்டார். இறுதியாக போர்வீரர்களால் 21–ம் வயதில் கொல்லப்பட்டார். பால்மணம் மாறாத தன் பச்சிளம் குழந்தையை வைத்துக் கொண்டு அந்த பெண் செய்த விசுவாசப் போராட்டம் நம்மை புல்லரிக்கச் செய்கிறது.

பொதுவாக பெலவீனமான பாண்டங்களாக கருதப்பட்ட பெண் கிறிஸ்துவால் பெலப்படுத்தப்பட்டார். இன்று நம் அனைவருக்கும் சாட்சியாக இருக்கிறார். தியான ஆதாரமாக கொடுக்கப்பட்ட வசனம் "என்னை வலுவூட்டுகிறது கிறிஸ்துவினால்." பவுல் பிலிப்பியருக்கு கடிதம் எழுதும் போது இந்த இளைவாக்கியத்தைக் குறிப்பிடுகிறார். கிறிஸ்து நம்மை பெலப்படுத்துகிறார் என்பதற்கு இது இன்னுமொரு சான்று. ஏனென்றால் இந்த கடிதம் எழுதும்போது அவர் இருந்த இடம் சிறைச்சாலை. ஒருவர் குளிரூட்டப்பட்ட அறையில் இருந்து கொண்டு எதை வேண்டுமென்றாலும் எழுத முடியும். ஆனால் சிறைச்சாலையிலிருந்து இந்த வார்த்தையை எழுத வேண்டுமென்றால் கிறிஸ்து அவரை எவ்வளவாய் பெலப்படுத்தியிருப்பார்.

கிறிஸ்து ஒரு மனிதனை எவ்வாறு பெலப்படுத்துகிறார். அதற்கு நாம் செய்யக்கூடிய காரியங்களை திருமறையின் வெளிச்சத்தில் தியானிப்போம்.

**[illegible]**

திருமறையில் பெலமானவர்களாக கருதப்படும் பல விசுவாச போராட்ட வீரர்கள் தங்களை பெலவீனர்கள் என ஏற்றுக் கொண்டவர்கள்தான். 1 கொரி. 4:7–ல் பவுல் "மண்பாண்டங்கள் போன்ற நாங்கள்" என்று குறிப்பிடுகிறார். மண்பாண்டங்கள் பெலவீனமானவைகள், எளிதில் உடையக் கூடியவைகள், மனிதர்களாகிய நாமும் அப்படிப்பட்டவர்கள்தான். ஆனால் மண்பாண்டங்களாகிய நமக்குள் "நற்செய்தி" என்னும் கிறிஸ்து செயலாற்றி நம்மை பெலப்படுத்துகிறார்.

மனிதர்களாகிய நாம் ஒன்றைத் தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும். நாம் கடவுளால் மண்ணினாலே உருவாக்கப்பட்டவர்கள். சர்ப்பங்களால் எளிதில் வஞ்சிக்கப்படக்கூடியவர்கள். பிறப்பிலே பாவமானவர்கள். சங்கீதக்காரன் தாவீது சொல்லும்போது "என் தாய் என்னை பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்" என்கிறார். நாம் பிறக்கும் போதே பாவமானவர்கள்.

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளே நாம் பெலவீனமானவர்கள் என்பதை உணர்ந்து கொள்ள அழைக்கப்படுகிறோம். எந்த மனிதன் தன் இயலாமையை,





# வேத வினா போட்டி - ஜூன் 2024

## விடை தருக (யாத்திராகமம்)

1. ஓய்வு நாளில் வேலை செய்கிறவன் என்ன செய்யபட வேண்டும்?
2. கர்த்தருடைய பட்சத்தில் இருக்கிறவர் யார்? என்று கேட்டது யார்? யாரெல்லாம் அவனிடத்தில் கூடி வந்தார்கள்?
3. "என்னை விட்டு அப்பாலே போ" என்று யார் யாரை பார்த்து கூறினார்?
4. எபிரேய மருவத்துவச்சிகளின் பெயர் என்ன?
5. ஒவ்வொரு தலைக்கும் பரிசுத்த ஸ்தலத்தின் சேக்கலியின்படி அரைச் சேக்கலாகிய எத்தனை விழுக்காடு சேர்ந்தது?
6. கர்த்தருடைய நாமம் என்ன? அவர் எப்படிப்பட்ட தேவன்?
7. நியாயவிதி மார்ப்பதக்கத்திலே எவைகளை வைக்க வேண்டும்?
8. மன்னா என்றால் என்ன்?
9. இஸ்ரவேல் புத்திரர் எகிப்திலே குடியிருந்த வருஷம் எத்தனை?
10. தேவன் எதற்காக எழுந்தருளினார் என்று மோசே கூறினார்?

## 2024 மே மாத விடைகள்

1. ஆதி: 14:3 – உப்புக்கடல், 2. ஆதி: 25:20 – ரெபெக்காளை – 40 வயதில், 3. ஆதி: 46:20 – பிள்ளைகள் மனாசே, எப்பிராயீம், தகப்பன் – போத்திபிரா, 4. ஆதி: 24:50 – லாபான், பெத்துவேல் 5. ஆதி: 4:24 – காயீன் – ஏழுபழி, லாமேக்கு – எழுத்தேழு பழி, 6. ஆதி: 42:37 – ரூபன், 7. ஆதி: 49:21 – நப்தலி, அவன் இன்பமான வசனங்களை வசனிப்பான் 8. ஆதி: 3:16 – புருஷனை, 9. ஆதி: 33:1 – 400 பேரோடே, 10. ஆதி: 50:26 – 110 எகிப்து தேசத்தில்

**2024 [illegible]**

NM 250, NM 900, NM 664, NM 2425, NM 2157, NM 429, NM 2913, NM 2181, NM 1238, NM 1689, NM 1619, NM 694, NM 1913, NM 1989, NM 1981, NM 1362, NM 774, NM 1880, NM 1365, NM 1740, NM 2164, NM 432, NM 1390, NM 1885, NM 175, NM 2926, NM 1295, NM 533, NM 1924, NM 634, NM 676, NM 2917, NM 2908, NM 561, NM 460, NM 2171, NM 2162, NM 391, NM 352, NM 241, NM 2188, NM 2192, NM 391, NM 352, NM 241, NM 2188, NM 2192, NM 1690, NM 1669, NM 1748, NM 412, NM 1810, NM 509, NM 2912, NM 1935, NM 687, NM 1914, NM 90, NM 1645, NM 2910, NM 298, NM 2916, NM 2915, NM 2170, NM 1511, NM 595, NM 255, NM 2163, NM 2208, NM 1787, NM 2185, NM 863, NM 2112, NM 2129, NM 2169, NM 607, NM 2156, NM 421, NM 2147, NM 2148, NM 1969, NM 342, NM 1934, NM 444, NM 300, NM 1928, NM 1847, NM 2928, NM 1987, NM 1891, NM 1801, NM 1488.

[illegible]

**நியுமேன் மிஷனரி ஊழியங்கள்**

221/93, ஜோசுவா தெரு, விஜயதா மண்டபம் (கிழக்கு) நாகர்கோவில்-1. Phone: 04652-233398

# H.B.S. - 2024
# பலன் அளிக்கும் தேவன்



தமிழ்நாடு



ஆந்திரா




ராஜஸ்தான்



சத்தீஸ்கர்



உதய்ப்பூர்



ஹிமாச்சல் பிரதேசம்





தோல்வியை ஏற்றுக் கொள்கிறானோ அந்த மனிதனால் கடவுளுடைய பெலனை அடைய முடியும். கிறிஸ்துவுக்காக வாழ முடியும். "கிறிஸ்துவினாலே எல்லாம் கூடும்" என்பதற்கு "என்னால் எல்லாம் முடியும்" என்பதற்கும் நெடுந்தூர வித்தியாசம் உண்டு.

**[illegible]**

எப்பொழுது நாம் பெலவீனமானவர்கள் என்பதை அறிந்து கொள்கின்றோமோ, மண்ணால் உருவாக்கப்பட்டவர்களாகிய நாம் மண் தான் என்பதை உணருகின்றோமோ, அப்பொழுது கிறிஸ்து நம்மை பெலப்படுத்துவார் என்பதை உணர முடியும்.

1 கொரி.4:11–13 வரையுள்ள இறைவாக்கியங்களில் நிர்வாணம், பசி, தாகம், சாபம், நாடோடி வாழ்க்கை, அவமானம், துன்பம், உலகத்தின் கல்வி எல்லாம் குப்பை என எண்ணுதல் என்ற தன் அனுபவத்தைப் பகிர்ந்து கொள்கிறார். இந்த எல்லாச் சூழ்நிலைகளிலும் அவர் சோர்ந்து போகவில்லை. 2 கொரி.11:23–27 வரையுள்ள இறைவாக்கியங்களில் "சிறைவாசம், அடிபடுதல், சாட்டையடி, தடியடி, கல்லெறியப்படுதல், கப்பல் சேதம், ஆழ்கடலில் தவித்தல், கள்வர்கள் கையில் அகப்படுதல், கண்விழிப்பு, பசி, குளிரால் வாடினேன்" என எழுதுகிறார். நற்செய்தி நிமித்தமாக ஒரு மனிதன் பட்டப்பாடுகளை பாருங்கள். ஆனால் இவையெல்லாவற்றிலேயும் அவர் கிறிஸ்துவினால் பெலப்படுத்தப்பட்டார்.

தான் பட்டப்பாடுகளையெல்லாம் தாங்கிக் கொண்டு பவுலால் எப்படி வாழ முடிந்தது. இன்று இறைப்பணியில் சிறு இடறல் வந்தாலும் நம்மால் தாங்கிக் கொள்ள முடிவதில்லை எதற்காக திருப்பணிக்கு வந்தோம்? என எண்ணுகிறோம். நம் அனைவருக்கும் திருத்தூதுவர் பவுலின் வாழ்வு ஒரு எடுத்துக்காட்டு.

இத்தனைப் பாடுகள் பட்டாலும் அவர் நற்செய்தி பணியை விடவில்லை காரணம், பவுலை பெலப்படுத்தியவர் கிறிஸ்து. அதே கிறிஸ்து நம்மையும் பெலப்படுத்துவார்.

**[illegible]**

நம்மை பெலப்படுத்தும் கிறிஸ்து அவருடைய திட்டத்தை இவ்வுலகில் நிறைவேற்ற நம்மை ஊக்குவிக்கிறார். இவ்வுலகில் வாழும் அனைவருக்கும் கடவுள் ஒரு கடமையை வைத்திருக்கிறார். ஆனால் கிறிஸ்தவர்களாகிய நமக்கு கூடுதல் கடமை ஒன்று உண்டு. அதுதான் அருட்பணி செய்வது.

அப்.1:8 தூய ஆவியரால் பெலப்படும் போது நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை அதே இறைவாக்கியம் நமக்கு தெளிவாக உணர்த்துகிறது. "உலகின் கடையெல்லை வரைக்கும் எனக்கு சாட்சிகளாய் இருப்பீர்கள்" எந்த சூழ்நிலை வந்தாலும் ரோமர்8:35–ல் சொல்லப்பட்ட இக்கட்டான சூழ்நிலைகள் எது வந்தாலும் கடவுளுடைய திட்டத்தை செயல்படுத்துவதிலிருந்து நம்மை இடறலடைய செய்ய முடியாது. ஏனென்றால் நம்மை பெலப்படுத்துகிறவர் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து.

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர, சகோதரிகளே! எபிரேயர் 4:16–ல் சொல்லப்பட்டபடி நம்மை போல் சோதிக்கப்பட்டு "பாடுபட்டு" கஷ்டங்களை அனுபவித்தவரால் மட்டுமே, அந்த கஷ்டமான நேரத்தில் நமக்கு பெலன் கொடுக்க முடியும். நம்மை போல் இருக்கும் பிரதான ஆசாரியராகிய இயேசு கிறிஸ்து நம்முடைய பெலவீனமான நேரங்களில் நிச்சயமாக நம்மைப் பெலப்படுத்துவார். பெலப்படுகின்ற நாம் கிறிஸ்துவின் திட்டத்தை இவ்வுலகில் நிறைவேற்றுவோமாக. ஆமென்!

BIBLE STUDY

# Walking as Children of Light

(Ephesians 5:8-14)

Bro. **P. Oliver Charles,** M.A., B.D., M.Th

This is the second of three walk commands in this chapter.In verse 2,we read that we are to walk in love. In verse 15 we will read that we are to walk circumspectly. Showing that we are wise rather than foolish. In verse 8, we are told we should walk as children of light.we who were once part of Satan's dark kingdom are now freed from it and no longer walk in darkness; we now know the spiritual truth that dispels the darkness we once lived in.

Apostle Paul wrote to the Thessalonians believers " ye are all the children of light , and the children of the day", we are not of the night ,more of darkness(1 Thess 5:5)Ephe 4:18,19, reveals the depth of spiritual darkness;Having the understanding darkened; being alienated from the life of God through the ignorance that is in them because of the blindness of their heart; who being past feeling have given themselves over unto Lasciviousness', to work all uncleanness with greediness", instead of that, we now can exhibits the fruit of the spirit ,such as goodness", righteousness and truth-things that are acceptable to the lord.

People are not basically good, as some would have us believe. These who are ignorant of God's word are identified with the evil of this world and thus are the embodiment of the darkness. All that changes, however, when that natural darkness is dispelled by the light of the truth as found in the gospel of Christ.

## ஜெபியுங்கள்

நமது மிஷனரி பயிற்சி மையம் சிறப்பாக நடைபெற்று வருகிறது. தற்போது ஒவ்வொரு மாதமும் 1,32,000/– தேவையாக உள்ளது. இப்பயிற்சி பணி சிறப்பாக நடைபெற ஜெபியுங்கள், தாங்குங்கள்.





# நியுமேன் தலைமை அலுவலக கட்டிடப்பணி

குமரியை தலைமை இடமாக கொண்டு இயங்கி வரும் நியுமேன் மிஷனரி ஊழியத்திற்கான தலைமை அலுவலக கட்டிடப் பணியானது விரைவில் நிறைவடையும் படியாக ஜெபித்து வருகிறோம். நமது 12 மாநிலத்தில் இருந்து வருகின்ற மிஷனரிகள் மற்றும் பங்காளர்கள் "தங்கும் அறை" கட்டவும், ஊழியக்காரியங்களுக்காக ஜெபிக்க "ஜெப அறை" கட்டவும், எல்லாப் பணித்தளங்களையும் ஒருங்கிணைப்பதற்கான "அலுவலக அறை" கட்டப்படவும், பிற மாநில பணிதளங்களில் நடைபெறுகிற ஊழியங்களை ஒளிபரப்புவதற்கான **Media station** ("ஊடக அறை"), சிறுவர் ஊழியத்திற்கான நிகழ்வுகளை **(HBS)** பதிவு செய்வதற்கான **Recording Studio** ("பாடல் பதிவு அறை"), பொறுப்பாளர்கள் தங்கி கவனிக்க "தங்கும் அறை" இவை யாவும் அமைப்பதற்கு ரூ. **68,52,400/-** தேவை. தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம், தாங்குவோம்.

- மிஷனரி மற்றும் பங்காளர் தங்க 10 அறை அமைக்க ஒரு அறைக்கு தலா: ரூ. 3,00,000/- (மூன்று லட்சம்) தேவை.
- அலுவலக அறை கட்ட: ரூ. 10,00,000/– (பத்து லட்சம்) தேவை.
- **Prayer Hall:** ரூ. 10,00,000/- (பத்து லட்சம்) தேவை.
- **Media station:** ரூ. 5,00,000/- (ஐந்து லட்சம்) தேவை.
- **Recording Studio :** ரூ. 5,00,000/- (ஐந்து லட்சம்) தேவை.
- பொறுப்பாளர் தங்கும் இல்லம்: ரூ. 20,00,000/- (இருபது லட்சம்) தேவை.
- ஒரு சதுர அடிக்கு ரூ. 2000/- தேவை.



தலைமை அலுவலகத்திற்கான கட்டுமான பணிகள் நடைபெறுகிறது.

கிறிஸ்துவின்
சுவிசேஷ வீரர்கள்

# அலெக்ஸாண்டர் டஃப்

Sis. ஜினி

மலர்ந்தது : 15.04.1806 — தரிசன பூமி : இந்தியா

மலர்ந்த நாடு : பெர்த்ஷையர், ஸ்காட்லாந்து — உதிர்ந்தது : 12.02.1878

பதினெட்டாம் நூற்றாண்டின் ஆரம்பம். இந்தியாவின் வங்காள மாநிலம் கிறிஸ்துவை அறியும் வாய்ப்பினைப் பெற்றது. பல மிஷனெரிகள் வங்காளத்தை உயிர் மீட்சி அடையச் செய்தனர்.

கியாந்தர், ரிங்கல் தௌபே, வில்லியம் கேரி, மார்ஷ்மென், வார்டு ஆகியோர் வரிசையில் சிறப்பிடம் பெறுபவர் கனம் அலெக்ஸாண்டர் டஃப். ஸ்காட்லாந்து நாட்டிலிருந்து இந்தியாவிற்கு மிஷனெரியாக வந்தவர். வரும் வழியில் இருமுறை அவரும் அவரது மனைவியும் கப்பல் சேதத்தினின்று தப்பினார்கள். பின்னர் பல இன்னல்களுக்குட்பட்டு 1830 ஆம் ஆண்டு கல்கத்தா வந்து இறங்கினார். இவர் சொற்திறனும், எதையும் சாதிப்பதற்கான ஆற்றலும் படைத்தவர். வங்காள மாணவர்களுக்கு ஆங்கில மொழியைக் கற்றுக் கொடுப்பதன் மூலம், அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்த எண்ணி, கல்லூரி ஒன்றை 1830 ஆம் ஆண்டு ஆரம்பித்தார். ஆனால் அக்கல்லூரி திறக்கப்பட்டபோது வெறும் ஐந்து மாணவர்களே வந்து சேர்ந்தனர்.

அலெக்ஸாண்டர் டஃப்பின் அயராத உழைப்பினால் 300 மாணவர்கள் கல்லூரியில் இணைந்தனர். டஃப் பலவித கலைகளையும், ஆங்கிலம் மூலம் அவர்களுக்கு கற்பித்தார். மக்கள் கல்வியில் முன்னேற்றமடைந்ததால் தங்கள் சமுதாயத்திலுள்ள குறைபாடுகளை மறையச் செய்தனர். உடன்கட்டை ஏறுதலின் கொடூரமும், குழந்தைப் பருவ விவாகமும் விடை பெற்றன. நற்செயல்கள் அனைத்தும் சரியான முறையில் நடைபெற்றன.

ஆங்கிலத்தில் கிறிஸ்தவ நற்செய்திக் கூட்டங்களை டஃப் ஆரம்பித்து, அநேகரை கிறிஸ்தவ போதனையில் வளரச் செய்தார். இதனால் வங்காளத்தில் புது யுகம் தோன்றியது.

## வாழ்த்துகிறோம்

திருமதி. லலிதா ஜாஸ்பர் அவர்கள், காலஞ்சென்ற தனது கணவர் திரு. ஜாஸ்பர் சந்திரதாஸ் அவர்கள் முதலாம் ஆண்டு நினைவாக நமது மிஷனரி பயிற்சி மையத்தில் ஒரு நாள் உணவினை சிறப்பாக வழங்கியமைக்காக வாழ்த்துகிறோம்.





# ஊழியத் தேவைகளுக்காக ஜெபியுங்கள்

- 2024–ஆம் ஆண்டுக்கான தரிசனம் நிறைவேற.
- நமது தலைமை அலுவலகம் கட்டுமான பணிக்கு 1 கோடி தேவை.
- மாவட்ட வாரியாக புதிய முன்னேற்ற பணியாளர்கள் கிடைக்க.
- நமது பணித்;தளங்களில் உபயோகிக்க மற்ற மொழிகளில் (ஒடியா, ஹிந்தி, ஆங்கிலம்) பாடல் புத்தகம் அச்சடிக்க தேவைகள் சந்திக்கப்பட.
- தமிழ்நாடு, ஒரிசா, கர்நாடகா, ஆந்திரா ஆகிய மாநில பணித்தளங்களில் சபைக்கான இடம் வாங்க தலா 3 இலட்சம் தேவை.
- நமது பணித்தளமாகிய பெத்தனேந்தல், தும்பிவாடி சபை பயன்பாட்டிற்கான Sound System தலா ரூ. 40,000/– தேவை.
- நமது சபையை சார்ந்துள்ள மொத்தம் 10 மிஷனரி இல்ல பராமரிப்பு பணி (ஒரிசா, தமிழ்நாடு) தலா ரூ. 30,000/– தேவை.
- நம்மீட்பு மாதம் தோறும் வெளியிட ரூ. 20,000/– தேவை.
- இவ்வாண்டு பஞ்சாப், ஹரியானா, ராஜஸ்தான் மற்றும் தமிழ்நாடு ஆகிய பணித்தளங்களில் நடைபெறுகின்ற சபை கட்டுமான பணிகள் விரைவில் முடிவடைய.
- Nest மூலம் உதவ இருக்கினற கல்வி உதவி தொகை ரூ. 500/– 10 தையல் இயந்திரம், 5 விதவைகளுக்கு வீடு மற்றும் பொருளாதார உதவிகள் செயல்படுத்திட.
- பயிற்சி மிஷனரிகளை சபை நிகழ்வுகளுக்கு அழைத்து செல்லவும் சிறப்பு நிகழ்வுகளுக்கு கொண்டு செல்லவும் நம் இயக்கத்திற்கு ஒரு Tempo Traveller வாங்க ரூ. 20,00,000/– (இருபது லட்சம்) தேவை.
- மிஷனரி பயிற்சி மையத்தில் புதிய மாணவர்கள் வர.
- மிஷனரி பயிற்சி பெற்று வருகின்ற 25 மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூ. 1000/– தேவை.
- மிஷனரி பயிற்சி பெற்று வருகின்ற மாணவர்களின் பயன்பாட்டிற்கு 5 Bunkers (1 Bunkers ரூ.10,000/–) தேவை.
- மாணவர்களின் விடுதியில் போடுவதற்கு 10 Wall Fan (1 Wall Fan ரூ.5,000/– 3 Celling Fan (1 Celling Fan ரூ.5,000/–) தேவை.
- நமது மிஷனரி பயிற்சி மையத்தில் மின்சார இணைப்பு இல்லாத காரணத்தினால் சோலார் மூலம் மின்சாரம் எடுக்கப்பட்டு உபயோகப்படுத்தி வருகின்றோம். தற்போது உபயோகித்து வருகின்ற 6 பேட்டரியும் பழுது ஆகிவிட்ட காரணத்தினால் அதற்கு பதிலாக 3 புதிய பேட்டரி வாங்க 1–க்கு ரூ. 20,000/– வீதம் ரூ. 60,000/– தேவைப்படுகிறது.
- மிஷனரி பயிற்சி மையத்தில் உள்ள கட்டுமான குறைபாடு மற்றும் 2KV Solar Plant இவைகள் அமைக்க 5 இலட்சம் தேவை.

## அறிவிப்பு

நமது மிஷனரி பயிற்சி மையத்தில் 20 மாணவர்கள் தங்கி பயிற்சி பெற்று வருகின்றார்கள். அவர்களுக்கு ஒருநாள் உணவிற்கான செலவு ரூ. 6000/–. உங்களது குடும்பத்தின் பிறந்தநாள், திருமண நாள் மற்றும் சிறப்பு நிகழ்ச்சிகளை எங்களது பயிற்சி மாணவர்களுடன் தாங்களும் இணைந்து பகிர்ந்து கொண்டால், நீங்கள் கொடுக்கும் காணிக்கை (ரூ.6000/– ஒருநாள் செலவு) மூலம் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு மகிழ்ச்சியும் ஆசீர்வாதமும் உண்டாகும்.

# பணித்தள செய்திகள்

**தமிழ்நாடு:**

[redacted] பணிதளத்தில் சகோதரி மரியம்மாள் அவர்கள் சுவிசேஷத்தை ஏற்றுக் கொள்ள மனமற்று காணப்பட்ட நிலையில் தற்போது தானாகவே முன் வந்து ஜெபத்தில் கலந்து கொண்ட படியாலும், சகோதரி சாவித்திரி கடன்பிரச்சனையிலிருந்து மீண்டு, கடன்களை தீர்க்கும் படியாக தேவன் அளித்த கிருபைக்காகவும், படப்பாக்குறிச்சி பணிதளத்தில் தேவன் ஜேக்கப் H.B.S. பயிற்சியில் கலந்துக் கொள்ளும்படியாக தேவன் அருளிய ஈவுக்காகவும், சேந்திமங்கலம் பணித்தளத்தில் சகோதரர் மாரியப்பன் அவர்களின் பணியில் ஏற்பட்ட எல்லாவிதத் தடைகளையும், தேவன் மாற்றி கொடுத்தமைக்காகவும், ஒப்பனையாள்புரம் பணிதளத்தில் சிறப்பாக நடைபெற்ற வாலிபர் கூடுகைகள் மற்றும் H.B.S. முகாம்களுக்காகவும் கர்த்தரை துதிப்போம்.

[redacted] பணித்தளத்தில் அருமையான தாயார் செல்லம்மாவை இழந்து தவிக்கும் குடும்பத்திற்கு தேவன் ஆறுதல் அளிக்கும்படியாகவும், ஒப்பனையாள்புரம் பணிதளத்தில் சகோதரி அமராவதி அறுவை சிகிச்சை மூலம் பூரண குணமடையும்படியாகவும், சபையின் தேவைகள் சந்திக்கப்படும் படியாகவும், படப்பாக்குறிச்சி பணிதளத்தில் புதிதாக வருகை தரும் சகோ. செல்வி மற்றும் அவரது குடும்பத்திற்காகவும், தும்பிவாடி பணிதளத்தில் சகோ. ராகவனின் கடன் பிரச்சனைகள் நீங்கும்படியாகவும் ஜெபிப்போம்.

**ஒடிசா:**

[redacted] பணிதளத்தில் புதிதாக வருகை தரும் 6 குடும்பங்களுக்காகவும், சாதுபாலி பணிதளத்தில் நடைபெறுகின்ற H.B.S. ஊழியங்களுக்காகவும், குமுண்டே பணிதளத்தில் நோயிலிருந்து தேவன் அளித்த பாதுகாப்பிற்காக துதிப்போம்.

[redacted] பணிதளத்தில் சகோதரி பூஜாவின் தோல் வியாதி குணமாகும் படியாகவும், சகோ. சுரு சுர்ஜல் அவர்களின் செரிமான கோளாறுகள் சரியாகும் படியாகவும், குமுண்டே பணித்தளத்தில் மிஷனரி மனுவேல் அவர்களின் மகளின் திருமண தேவைகள் சந்திக்கப்படும்படியாகவும், ஜனகர்பாலி பணித்தளத்தில் அம்மை நோயினால் பாதிக்கப்பட்டுள்ள விசுவாசிகள் பூரண குணமடையும் படியாகவும், வறட்சியான சூழல் காரணமாக நிலவும் தண்ணீர் பற்றாக்குறை நீங்கும்படியாகவும், சாதுபாலி பணித்தளத்தில் H.B.S. நிகழ்வுகள் சிறப்பாக நடைபெறும் படியாகவும், வறட்சியான காலநிலை மாறும்படியாகவும் ஜெபிப்போம்.

**பஞ்சாப்:**

[redacted] பணிதளத்தில் புதியாதாக வருகை தருகின்ற சகோ. சோனு அவர்களுக்காகவும், தபே பணித்தளத்தில் சகோதரி விமலா குடும்பத்தினர் கர்த்தரை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டமைக்காகவும் கர்த்தரை துதிப்போம்.

[redacted] பணிதளத்தில் சுகவீனமாக காணப்படும் விசுவாசியின் தாயார் பூரண சுகம் பெறும்படியாகவும், தபே பணித்தளத்தில் சபையின் கட்டுமான பணிக்கான தேவைகள் சந்திக்கப்படும் படியாகவும், பணித்தள பயன்பாட்டிற்கான வாகன தேவைகள் பூர்த்தி செய்யப்படும்படியாகவும் ஜெபிப்போம்.

**கர்நாடகா:**

[redacted] பணிதளத்தில் நடைபெறுகின்ற H.B.S. ஊழியங்களுக்காகவும், ஒவ்வொரு நாளும் பத்திரமாய் பாதுகாத்து வருகின்ற மேலான கிருபைகளுக்காகவும், ஹாலி பணித்தளத்தில் சகோ. லெட்சுமனுக்கு தேவன் கொடுத்த பூரண சுகத்திற்காக கர்த்தரை துதிப்போம்.

[redacted] பணிதளத்தில் சகோதரி சுஜாதாவின் குடும்பத்தினர் மற்றும் சகோதரி





சங்கீதா பிசாசின் கட்டிலிருந்து விடுதலை பெறும்படியாகவும், சகோதரி சுஜாதாவின் குடும்ப வாழ்வில் உள்ள பிரச்சனைகள் நீங்கும்படியாகவும் ஜெபிப்போம்.

**தெலுங்கானா:**

[redacted] பணிதளத்தில் கர்த்தரை ஏற்றுக் கொண்ட காசுலம்மா அவர்களுக்காகவும், அவர்களது குடும்பத்திற்காகவும் கர்த்தரை துதிப்போம்.

[redacted] பணிதளத்தில் விபத்தில் சிக்கி காயமடைந்த சகோ. அசோக் அவர்களின் தாயார் விரைவில் குணமடைய ஜெபிப்போம்.

**சத்தீஸ்கர்:**

[redacted] பணிதளத்தில் அதிக வெப்பமான சூழ்நிலையிலும் ஜெபக்கூடுகையானது சிறப்பாக நடைபெற தேவன் கிருபை புரிந்ததற்காகவும், ஸாலிஹா பணித்தள முன்னேற்றத்திற்காக கர்த்தரை துதிப்போம்.

[redacted] பணிதளத்தில் மூலநோயினால் பாதிக்கப்பட்ட விசுவாசி பூரண குணடையும் படியாகவும், ஸாலிகா பணித்தளத்தில் சகோ. உமேஷ் அவர்கள் தனது பாவ வாழ்வை விட்டு மனமாற்றமடைந்து கிறிஸ்துவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டதற்காகவும், மதுபன்குர்ட் பணித்தள சபையின் முன்னேற்றத்திற்காகவும், சகோ. சுபாஷ் சிறுநீரக பாதிப்பிலிருந்து பூரண குணமடையும்படியாகவும் ஜெபிப்போம்.

## திருமண வாழ்த்து

செம்மண்குளம் பணித்தள மிஷனரி கார்த்திக் & டரீஷ் அவர்களின் திருமண நிகழ்வுகளை தேவன் ஆசீர்வதித்து சிறப்பாக நடைபெற கிருபை புரிந்தார். அன்னாரது திருமண வாழ்வு தேவனால் ஆசீர்வாதமாக அமைய வாழ்த்துகிறோம்.



தெலுங்கானா மாநில மிஷனரி சுதிர் குமார் & சிண்கா அவர்களின் திருமண விழா நிகழ்வுகளை தேவன் ஆசீர்வதித்து சிறப்பாக நடைபெற உதவினார். அன்னாரது திருமண வாழ்வு சிறப்பாக அமைய வாழ்த்துகிறோம்.



ஒரிசா மாநில மிஷனரி. ஜாதவ் மனானன் & நீமா போஹைற அவர்களின் திருமண விழா நிகழ்வுகளை தேவன் ஆசீர்வதித்து சிறப்பாக நடைபெற உதவினார். அன்னாரது திருமண வாழ்வு சிறப்பாக அமைய வாழ்த்துகிறோம்.

